## பிபில பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிபில பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிபில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சட்டரீதியாக உரித்தாகியிருந்த ரூபா 600,000 விற்பனை பெறுமதியான பிபில வைத்தியசாலைக்கு முன்னால் காணி மற்றும் ரூபா 1,000,000 ஆன போகலந்த காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,500 ஆன கடை வாடகை மற்றும் ரூபா 66,000 ஆன தாமதக் கட்டணங்கள் என்பவற்றை அறவிடுவதற்காக 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்த வேண்டிய அனைத்து வெளிப்படுத்தல்களையும் வெளிப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு அறிந்துகொள்வதற்காக தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறவேண்டிய நிலையான வைப்புக்கள் வட்டியை கணக்கீடு செய்யும் போ்து ரூபா 62,691 குறைத்து கணக்கீடு செய்தமையால் மிகை மற்றும் பெறவேண்டிய வட்டி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வட்டி வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது பிரதேச சபையை வலையமைப்பிற்கு உட்படுத்தும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,287,500 பெறுமதியான உபகரணங்கள் இயந்திரங்கள் மற்றம் உபகரணங்களின் கீழ0 கணக்கீழுடு செய்வதற்குப் பதிலாக கற்பசைன் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பொது நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த 06 டெப் கணனிகள் மற்றும் 503 நூலக புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமா அனைத்து சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்ட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் ரூபா 310,504 செலவிட்டு பிரதேச சபையின் களஞ்சியத்திற்கு கதவொன்றும் களஞ்சியத்தின் இராக்கைளையும் பொருத்தும் செலவினம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,759,144 தொகை நடைமுறையல்லாத பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அத்தொகையில் 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,005,026 தொகை நடைமுறைப் | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நடைமுறையல்லாத பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் சரியாக இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பின் கீழ் வேறாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை விளம்பர பதாதைக் கட்டணம் ரூபா 131,100 தொகை கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாமையால் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் பொது ரூபா 221,051 செலவிட்டு பொதுச் சந்தையில் கடையொன்றை நிர்மடாணிக்கும் செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அந்த அளவினால் மிகை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினம் சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஒ) | மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய காணப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 147,776 ஆன கடன் தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது பிபில பொது சந்தையை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 396,000 தொகை மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அந்த அளவினால் மிகை மற்றும் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினம் சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,675,308 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,646,526 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 1,541,054 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமையால் வெளிக்களத்தில் சென்று பணத்தை அறவிட முடியவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வீதவரியை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 21 கடைகளிலிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,229,017 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை கடை வாடகை யை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வாடகையை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் சபைக்குச் சொந்தமான ஆதுனங்களை குத்தகைக்கு வழங்கியதால் 2007 ஆம் ஆண்டு முதல் இருந்து ரூபா 45,664 தொகை 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 262,547 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,777,859 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 09 குத்தகையாளர்களுக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் ஏனைய நிலுவைகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 06 விளம்பர பதாதைகளுக்காக 2020 ஆம் ஆண்டிற்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 86,850 மற்றும் மீளாய்வாண்டிற்காக 08 விளம்பர பதாதைகளுக்காக ரூபா 87,900 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமான பரிசோதகரால் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிவித்தல் பதாதைகள் இனங்காணப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |